உ சிவமயம்





எந்நாட்டவர்க்கும் UNITY IN DIVERSITY இறைவா போற்றி

# உலக சைவநெறிப் பேரவை

(416) 769-7747. (416) 907-7434

## சைவ அறிவுப் பரீட்சை - ஏப்ரல் 2007

### வாய் மொழிப் பரீட்சை

**மழலைப் பிரிவு 4 - 5 வயது வரை**

(ஏப்ரல் 15, 2001க்கு பின் பிறந்தோர்)

1முதல் 18 வினாக்களுக்கு விடைளித்து விரும்பிய ஒரு தேவாரம் பாட வேண்டும்

---

**பாலர் பிரிவு 6 - 7 வயது வரை**

(15 - 4 - 1999 க்கும் 15 - 4 - 2001 க்கும் உட் பிறந்தோர்)

1முதல் 25 வினாக்களுக்கு விடையளித்து திருவாசகம் ஒன்று பாட வேண்டும்

---

**கீழ்ப் பிரிவு 8 - 9 வயது வரை**

(15 - 4 - 1997 க்கும் 15 - 4 - 1999 க்கும் உட் பிறந்தோர்)

1முதல் 32 வினாக்களுக்கு விடையளித்து விரும்பிய ஒரு திருவாசகம் புராணம் பாட வேண்டும்

---

**மத்திய பிரிவு 10 - 11 வயது வரை**

(15 - 4 - 1995 க்கும் 15 - 4 - 1997 க்கும் உட் பிறந்தோர்)

1முதல் 37 வினாக்களுக்கு விடையளித்து விரும்பிய ஒரு திருவாசகம் புராணம் அல்லது திருவிசைப்பா புராணம் பாட வேண்டும்

---

**மேற் பிரிவு 12 - 13 வயது வரை**

(15 - 4 - 1993க்கும் 15 - 4 - 1995 க்கும் உட் பிறந்தோர்)

1முதல் 42 வினாக்களுக்கு விடையளித்து விரும்பிய திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்றும் புராணமும் பாட வேண்டும்

---

**அதி மேற் பிரிவு 14 - 16 வயது வரை**

(15 - 4 - 1990க்கும் 15 - 4 - 1993க்கும் உட் பிறந்தோர்)

50 வினாக்களுக்கு விடையளித்து பஞ்சபுராணம் பாட வேண்டும்.

உ சிவமயம்

# உலக சைவநெறிப் பேரவை

## சைவ அறிவுப் பரீட்சை
## ஏப்ரல் 15, 2007

01. எமது சமயத்தின் பெயர் என்ன?
   1. காணாபத்தியம் 2. சௌரம் 3. கௌமாரம் 4. சாக்தம் 5. சைவம் 6. வைஷ்ணவம்

02. சைவசமயத்தின் முழு முதற்கடவுள் யார்?
   1. பிள்ளையார் 2. முருகன் 3. துர்க்கை 4. சிவபெருமான் 5. மகாவிஷ்ணு

03. சைவசமயத்தின் கோயில் எது?
   1. பிள்ளையார் கோயில் 2. துர்க்கை அம்மன் கோயில் 3. முருகன் கோயில்
   4. ஐயப்பன் கோயில் 5. சிவன் கோயில் 6. பெருமாள் கோவில்

04. தேவாரம் எந்த சுவாமிக்குப் பாடுவது?
   1. துர்க்கைக்கு 2. முருகனுக்கு 3. பிள்ளையாருக்கு 4. சிவபெருமானுக்கு

05. ஆறுமுக நாவலர் வளர்த்த சமயம் எது?
   1. வைஷ்ணவ சமயம் 2. காணாபத்திய சமயம். 3. சாக்த சமயம் 4. சைவ சமயம்

06. பிள்ளையாரை முழுமுதற் கடவுளாக வணங்குபவர் எந்த சமயத்தவர்?
   1. சைவ சமயத்தவர் 2. சாக்த சமயத்தவர் 3. காணாபத்திய சமயத்தவர்

07. சைவமக்கள் நெற்றியில் அணியும் சின்னம் எது?
   1. வெல்லம் 2. தைலம் 3. திருநீறு

08. திருஞான சம்பந்தர் 3 வயதில் பாடிய தேவாரம் எது?
   1. மந்திரமாவது நீறு 2. சொற்றுணை வேதியன் 3. தோடுடைய செவியன்

09. முருகன் யாருடைய பிள்ளை?
   1. பிள்ளையாருடைய பிள்ளை 2. சிவனுடைய பிள்ளை 3. ஐயப்பனுடைய பிள்ளை

10. மூன்று முறை கன்னத்தில் குட்டி தோப்புக்கரணம் போட்டு வணங்குவது எந்த சுவாமிக்கு
   1. துர்க்கைக்கு 2. சிவனுக்கு 3. வினாயகருக்கு 4. உமாதேவிக்கு

11. நெற்றியில் கண் உள்ளவர் யார்?
   1. மகாவிஷ்ணு 2. முருகன் 3. சிவபெருமான்

12. எல்லா தெய்வங்களும், தேவர்களும் வணங்கும் தெய்வம் எது?
   1. பிள்ளையார் 2. முருகன் 3. சிவபெருமான் 4. துர்க்கை அம்மன்

13. நாம் தினமும் பாதங்களைத் தொட்டு வணங்க வேண்டியவர்கள் யார்?
   1. நண்பர்கள், 2. நடிகர்கள் 3. அம்மா அப்பா 4. உறவினர்கள்

14. மும்மூர்த்திகள் யார்?
   1. பிள்ளையார், முருகன், ஐயப்பன், 2. சிவன், பிரம்மா, விஷ்ணு

15. முத்தேவிகள் யார்?
   1. சக்தி, லக்சுமி, சரஸ்வதி 2. விஷ்ணுதுர்க்கை, மஞ்சமாதா, புஷ்கலை

16. நெற்றியில் திருநீறு அணியும்போது என்ன சொல்ல வேண்டும்?
   1. பிள்ளையாரே, 2. முருகா 3. சிவ சிவ 4. ஐயப்பா

17. சிவபெருமானை பக்க அல்லது பரிவார மூர்த்தியாக ஆலயங்களில் வைக்கலாமா?
   1. வைக்கக் கூடாது 2. வைக்கலாம்

18. சைவ ஆலயங்களில் சிவபெருமானை எந்த மூர்த்தியாக வைக்க வேண்டும்?
   1. பக்க மூர்த்தியாக 2. பரிவார மூர்த்தியாக 3. மூல மூர்த்தியாக

19. சிவாயநம எனச் சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் வருமா?
   1. எப்போதும் அபாயம் உண்டு 2. அபாயம் ஒருநாளும் வராது

20. சிவதொண்டன் நிலையத்தை ஆரம்பித்த சுவாமியின் பெயர் என்ன?
   1. சாயி பாபா 2. ரமண மகரிஷிகள் 3. யோகர் சுவாமிகள் 4. சுவாமி விவேகானந்தர்

21. திருவாசகம் பாடிய சுவாமியின் பெயர் என்ன?

1. சுந்தரர் 2. சம்பந்தர் 3. மாணிக்க வாசகர் 4. திருநாவுக்கரசர்

22. சிவபெருமான் நடனத்தைக் காட்டியருளிய இடம் எது?

1. பழனி மலை 2. கதிர்காமம் 3. சிதம்பரம் 4. திருவண்ணாமலை

23. கார்த்திகை தீபம் எந்த தலத்தில் முதன்மையானது?

1. காசி 2. ராமேஸ்வரம் 3. திருவண்ணாமலை 4. முன்னேஸ்வரம்

24. உலகில் மிகப் புனிதமான நதி எது?

1. சிந்துநதி 2. நைல்நதி 3. கங்கை நதி 4. மாணிக்க கங்கை

24. சிவபெருமானுடைய தலையிலிருந்து பாய்ந்தோடும் புனித நதியின் பெயர் என்ன?

1. காவேரி 2. யமுனை 3. கங்கை 4. சரஸ்வதி

25. நினைத்தால் முத்தி தரும் தலம் எது?

1. திருவாரூர், 2. காசி, 3. திருவண்ணாமலை 4. சிதம்பரம்

26. பஞ்சாட்சரம் எனப்படும் ஐந்தெழுத்து மந்திரம் எது?

1. ஸ்ரீராம ஜெயம் 2. சரவணபவ 3. நமசிவாய 4. ஓம் சக்தி

27. தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டியவர் யார்?

1. அகத்தியர் 2. ராஜராஜ சோழன் 2. ஔவையார்

28. திருக்கோணேஸ்வரம் எந்த நகரத்தில் உள்ளது?

1. சென்னை 2. மதுரை 3. திருகோணமலை 4. காஞ்சிபுரம்

29. யாத்திரை தலங்களில் மிகமுக்கிய தலம் எது?

1. பழனி 2. நல்லூர் 3. காசி 4. கதிர்காமம்

30. தீய வினைகள் அதிகம் உள்ளவர்கள் சொல்ல முடியாத மந்திரம் எது?

1. ஓம் சக்தி 2. சரவணபவ 3. சாமியே சரணம் 4. சிவ சிவ

31. உலகிலே மிகச் சிறந்த சமயம் எது?

1. பௌத்த சமயம் 2. சைவசமயம் 3சமணசமயம் 4. இஸ்லாம்

32. சைவ சமயம் ஏன் சிறந்த சமயம்?

1. சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டது 2. மார்க்கண்டேயரால் தோற்றுவிக்கப்பட்டது.

33. பாசம் அல்லது மும்மலங்கள் என்றால் என்ன?

1. நன்மை, தீமை, பற்று 2. ஆணவம், கன்மம், மாயை 2. படைத்தல், காத்தல், அழித்தல்,

34. பெரிய புராணத்தைப் பாடியவர் யார்?

1. நம்பியாண்டார் நம்பி 2. சேக்கிழார் 3. சம்பந்தர்

35. சைவ சமயத்தில் கூறப்படும் நாயன்மார்கள் எத்தனை பேர்?

1. பன்னிருவர் 2. நால்வர் 3. அறுபத்துமூவர் 4. இருவர்

36. அமெரிக்காவில் பிறந்து சைவசமயத்தை வளர்க்க தொண்டாற்றிய சுவாமியின் பெயர் என்ன?

1. சுவாமி சச்சிதானந்தர் 2. சுவாமி ஆத்மானந்தர் 3. சுவாமி விவேகானந்தர்
4. சுப்பிரமுனிய சுவாமிகள்

37. சுப்பிரமுனிய சுவாமிகள் சுயம்புலிங்கம் கண்டெடுத்து சிவன் ஆலயத்தைக் கட்டும் அமெரிக்கத் தீவின் பெயர் என்ன?

1. மடகாஸ்கார் 2. ஹவாய் 3. பிஜித்தீவு 4. கியூபா

38. சிவனடியாரை வணங்காமற் சென்றவர் சிவபெருமானானலும் அவரை சைவ சமயத்திலிருந்து விலக்குவோம் என்று நெஞ்சுறுதியோடு உரைத்த நாயனார் யார்?

1. திருவள்ளுவர் 2. திருமூலர் 3. எறிபத்தர் 4. விறல்மிண்டர்

39. விரதங்களிலே மிகவும் சிறந்த விரதம் எது?

1. முருகன் விரதம் 2. ஐயப்பன் விரதம் 3. அம்மன் விரதம் 4. சிவ விரதம்
5. பிள்ளையார் விரதம்

40. வருடத்திலே ஒரு தடவை வரும் சிவனுக்குரிய மேன்மையான விரதம் எது?

1. திருவாதிரை 2. பௌர்ணமி 3. சிவராத்திரி

41. மாதத்திலே இரண்டு தடவைகள் வரும் சிறப்பான சிவவிரதம் எது?

1. ஏகாதசி 2. சதுர்த்தி 3. பிரதோஷம் 4. அஷ்டமி

42. தினமும் ஆலயம் செல்ல முடியாவிட்டாலும் எப்போது செல்ல வேண்டும்?

1. வாரத்தில் ஒரு நாள் 2. வருடத்தில் ஒரு நாள் 3. மாதத்தில் ஒரு நாள்

43. ஆலயத்தில் எதைப் பேண வேண்டும்?

1. விளையாடுவதை 2. சத்தம் செய்வதை 3. அமைதியை 4. கூச்சலிடுவதை

44. முத்தித் தலம் ஒன்று கூறுக?

1. திருவையாறு 2. திருவண்ணாமலை 3. திருப்பதி 4. திருத்தணிகை

45. உழைப்பதில் எத்தனை வீதம் தானம்(ஈதல்) செய்ய வேண்டும்?

1. பத்து வீதம் 2. பத்து டாலர் 3. இருபத்தைந்து வீதம்

46. தானம் செய்பவர்கள் அதிகமாக உள்ள இனம் எப்படி இருக்கும்?

1. ஒற்றுமை இல்லாது ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வார்கள்
2. ஒற்றுமையாகவும் சிறப்பாகவும் வாழ்வார்கள்

47. தானம் செய்யாமல் வாழ்பவர்களுக்கு என்ன நடக்கும்?

1. சிவபெருமான் அருள்கிடைக்கும்
2. தேடியதை தீயவர்களிடம் பறிகொடுப்பார்கள் (ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்)

48. உயர்ந்த குலத்தவர் யார்?

1. இடாதார்(கொடுக்காதவர்கள்) இழிகுலத்தோர்
2. கொடுப்பவர்கள் உயர் குலத்தோர் (இட்டார் பெரியோர்)

49. தீய வினைகளை அழித்து தேவர்களைப் போல வாழ்வைத் தரும் மந்திரம் எது?

1. அரோகரா 2. ஸ்ரீராம் 3. சிவ சிவ 4. சாமியே சரணம்

50. முத்தி நிலை என்றால் என்ன?

1. மரணம் பெறுவது 2. நிலையான சந்தோஷம் பெறுவது 3. துறவியாவது

